

# தமிழவேள் மாணவர் இதழ்

## 2022-2023



ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி – 2

# தமிழவேள் மாணவர் இதழ்

இதழ் 5 *ஆசிரியர் : முனைவர் சு. பானுமதி
முனைவர் க. சுப்புலட்சுமி* 2022-2023

## மழைத்துளி

ஏழிலிதனை ஏந்த நிற்கும் அகன்ற விசும்பும்
போறாமை கொள்ளும் நின் வரவால்
பார்வைத் தீண்டும் தீப்பொறி மின்னலும்
விரைந்து ஓடுமே நின் வரவால்!
அஞ்சி நடுங்கும் கொடூர இடியும்
நிசப்தம் ஆகும் நின் வரவால்!
தொட்டு விலகும் அலைகொண்ட அழியா ஆழியும்
வெட்கி பின்வாங்கும் நின் வரவால்!
இளமை தீரா பசுமை நிரம்பி வழியும் இலையும்
குரோத நெருப்பில் வாடும் நின் வரவால்!
நின் வதனம் கண்டதுவே நிதம் நிந்திக்கும்
நின்னையும் .......
நின் எழிலையுமே.......

போ. சுபாஷினி
இளங்கலை முதலாமாண்டு தமிழிலக்கியம்

*சிறகா ?? சிறையா???*

- வெ.மாரிச்செல்வி ,

- முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

அதிகாலை மணி 5.30 நளினியின் அலைபேசி சிணுங்கியது. விடியலின் மென்மை அவளுக்கு மட்டும் மெல்ல கனத்தது. மெட்ரோ சிட்டி வாழ்வில் கலங்கிப் போய் நிற்கும் தம்பதிகளில் நளினி, கார்த்தி தம்பதியும் மிச்சமில்லை. தனது அலைபேசியை அணைக்குமாறு எரிச்சல் பட்டு விட்டு இழுத்து மூடி உறங்கிய கணவனை சற்று பொறாமையோடு பார்த்தாள் நளினி.

**"நானும் தான் ஆபீஸ்க்கு போறேன், பகலெல்லாம் நாயா சாகிறேன், ஆனா, காலையில எழுந்திருச்சு எல்லா வேலையும் செஞ்சுட்டு ஆபீஸுக்கும் போகணும். ஆனா, இந்த மனுஷன் கொஞ்சம் கூட அலட்டிக்காம என்னமோ இவர் மட்டும்தான் வேலைக்கு போற மாதிரி பண்றாரே ,எல்லாம் என் தலைவிதி !!!"**

என்று தன்னை நொந்தபடி தனது அன்றாட வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள். அவர்களது குடியிருப்பு மிடில் கிளாஸ் மக்களின் தீப்பெட்டி அடுக்குமாடி. கிச்சனுக்குள் நுழைந்ததும் முதலில் பாலை அடுப்பில் வைத்து விட்டு பல் துலக்க பாத்ரூமுக்குள் நுழைந்தாள். ஒரு மாதிரியான வாசனையுடன் கூடிய உணர்வு தோன்ற பிரஷ் இருந்த இடத்தை பார்த்தாள்.

முதல் நாள் பிள்ளைகள் குளிக்கும் போது எடுத்த ஷாம்பூ பாட்டில் மூடாமல் கவிழ்த்து போட்டது மெல்ல வடிந்து அனைத்து பிரஷ்களிலும் பரவி இருந்தது. எரிச்சலுடன் கோபமும் சேர, கோபத்துடன் படுக்கையறைக்கு சென்றாள். பால் போல் தூங்கும் மகனை பார்க்க கோபம் வந்தது. இருந்தாலும் இப்ப இவனை எழுப்பினால் வேலை கெட்டுடும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டு திரும்பிய போதுதான் அடுப்பில் வைத்த பால் நினைவுக்கு வந்தது.

பால் உஸ் என்ற சத்தத்துடன் நளினியை விட அதிக கோபத்தில் பொங்கியது. பதட்டத்தில் ஓடி வந்து பால் சட்டியை இறக்கிய வேகத்தில் கை புண்ணாகியது.

"என்ன வாழ்க்கை டா இது. முடியலடா சாமி, என்று தன்னை நொந்தவாறு பிரிட்ஜை துழாவினாள். அப்போதுதான் தக்காளி காலியானது நினைவுக்கு வந்தது.

**"கார்த்தி, தக்காளி போட்ட சாம்பார் தான் சாப்பிடுவான். புளி சேர்த்தால் என் புள்ளைக்கு ஆகாது,"**

மாமியாரின் குரல் தானாய் செவியில் அறைவது போல தோன்றியது. இன்னைக்கு சாம்பாரும், அப்பளமும் வச்சி சமாளிச்சிடலாம் என்று எண்ணிய நளினிக்கு அடுத்த சோதனை.

"இப்ப புதுசா ஏதாவது குழம்ப பத்தி யோசிக்கணுமே என தோன்றியது, சரி பேசாமல் லெமன் ரைசும் *potatato fry* யும் பண்ணிடலாம் என்று எண்ணியபடி வேகமாக லெமனை தேடினாள். நல்ல வேலையாக இரண்டு லெமன் கையில் கிடைத்தது. கிடைத்த லெமனை பிழிந்து விட்டு லெமன் சாதத்துக்கு கரைசல் தயாரித்து குக்கரில் சாதம் வைத்தாள். உருளைக்கிழங்கை தண்ணீரில் நனைய போட்டாள். அதற்குள் அவளது கணவன் கார்த்தி எழுந்து

"காபி எங்க ?? என்று கத்தினான்."

கணவனுக்கு காபியும் பிள்ளைகளுக்கு பாலும் தயார் செய்துவிட்டு ஹாலுக்கு வந்தாள். கணவனுக்கு காபியை கையில் கொடுத்து விட்டு தனக்கான காபியை ஓரமாக வைத்துக் கொண்டே சமையல் வேலையில் மும்மரமானாள். உருளைக்கிழங்கை வேகமாக சீவி பொரியல் செய்து கொண்டே சட்டினிக்கு தேவையான தேங்காய், பொரிகடலை போன்றவற்றை மிக்ஸி ஜாரில் சேர்த்து அரைத்தாள். தோசைக்கான மாவினை பிரிட்ஜில் இருந்து எடுத்து வெளியே வைத்தாள். இதற்குள் அவளது காபியை மறந்தே போனாள். எப்போதும் போல ஆறிய காபியை அவசரமாக குடித்தாள். சட்னிக்கு தாளிக்க வாணலி அடுப்பில் வைத்து விட்டு ஓடி சென்று அவசர கதியில் மகனை எழுப்பினாள் அப்போதுதான் பிரஷ் முழுவதும் ஷாம்பு வாடை வருவது நினைவுக்கு வர சட்டென திட்ட தொடங்கினாள்.

அவனும் புரியாமல் விழித்தான். கருகல் வாடை வாணலியை நினைவூட்டியது. கணவனிடம் அர்ச்சனையும் வாங்கி தந்தது.

“அடுப்புல எதையாது வச்சிட்டு அங்கிட்டு இங்கிட்டு போகாத என்று எத்தனை தடவை சொல்றது அறிவே இல்லையா உனக்கு ? எப்ப பார்த்தாலும் எதையாவது ஒன்னக் கருக விடுற மனுஷன் நிம்மதியா சாப்பிட வேண்டாம்”

பால்கனியில் இருந்து திட்டியபடியே செய்தி தாளின் அடுத்த பக்கத்தில் பார்வையை செலுத்தினான்.

“மனசுல பெரிய கலெக்டர் என்று நினைப்பு, இவர் பேப்பர் படிக்கலைன்னா பொழுது விடியாது பாரு, நம்மளை இப்படி திட்டுறாரே, என்னைக்காவது பிள்ளைகளை கொஞ்சம் கிளப்பி விடுவோம் என்று நினைக்கிறாரா??”

என்று மனதில் திட்டியபடி பல்லை கடித்துக் கொண்டு சமையல் அறைக்குள் ஓடினாள். இதற்குள் மகன் பல் துலக்கி விட்டு அந்த சோபாவில் பொறுமையாக கார்ட்டூன் பார்த்துக் கொண்டே பாலை குடிக்க தொடங்கினான். நளினிக்கு எரிச்சலாக வந்தது. இப்படி பொறுமையா குடிச்சி எப்ப முடிப்பான் ?? பிரகாஷ் சீக்கிரம் பாலக் குடி”

என மகனிடம் இரைந்தாள். பிரவீன் எழுந்துட்டானானு பாரு!!

சமையல் அறையில் இருந்து வெளிப்பட்ட நளினி தனது இரண்டாவது பையன் பிரவீனை எழுப்பி பல் தேய்த்து குளிக்க வைத்து பள்ளிக்கு தயார் செய்தாள். அழுத வண்ணம் பாத்ரூமுக்குள் நுழைந்த தனது மகனை தனது அவசரத்திற்காக அரக்க பரக்க கிளப்பினாள். இதற்குள் பொறுமையாக செய்தித்தாளை படித்து முடித்த கார்த்தி

“இன்னைக்காவது சீக்கிரமாக கிளம்புவியா ?? இல்லன்னா நான் கிளம்பவா?? என்று அதிகாரம் காட்டினான்.”

இவருக்கு கொஞ்சமாது மனசாட்சி இருக்கா?? மனதுள் தன்னைத்தானே நொந்தபடி வேலைகளில் இன்னும் அவசரம் காட்டினாள். இருவரையும் பள்ளி வேனில் ஏற்றி விட கார்த்தியுடன் அனுப்பி வைத்தாள். அந்த கால இடைவெளியில் அவள் தயாராக வேண்டும். அவசரகதியில் கையில் கிடைத்த சுடிதாரை எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்குள் ஓடினாள். பாத்ரூம் ஷவரை திறந்தபோது சிந்திய தண்ணீரோடு அவளது கண்ணீரும் கலந்து ஓடியது. சாதாரணத்திற்கும் குறைவான ஒப்பனையுடன் தயாரானாள். காலை உணவினை கார்த்திக்கு எடுத்து வைத்தாள்.

அவன் தனது அலைபேசியை தடவியவாறு பொறுமையாக உண்டுமுடித்தான். அதற்குள் வீட்டின் இதர வேலைகளை அங்கங்கு செய்துவிட்டு தனக்கான தோசையை டப்பாவில் போட்டுவிட்டு ஆபீசுக்கு தயாரானாள்.

கார்த்தியும் நளினியும் வீட்டை விட்டு வெளியேறுகையில் மணி 8.30. கார்த்தி வழக்கமான எரிச்சலுடன் பைக்கை ஸ்டார்ட் செய்ய அது உர்.. உர்ரென்று சத்தமித்தபடி சாலையில் விரைந்தது. நளினி இறங்கும் பஸ் ஸ்டாப்பில் அவளை இறக்கிவிட்டுவிட்டு கார்த்தி கிளம்பினான்.

நளினி தனது அலுவலக தோழி விஜயாவுக்காக காத்திருந்தாள். அவளும் அரக்க பரக்க ஓடி வந்தாள்.

**"என்ன டீ ? இன்னைக்கும் இப்படி ஓடி வர்ற??**

**வீட்டில எல்லோருக்கும் எல்லாத்தையும் பண்ணிட்டு வர வேணாமா??**

**சரி, சரி பொலம்பாத, இது பஸ் ஸ்டாப்."**

அவர்களின் இந்த உரையாடலுக்கு இடையே நிறுத்தத்தில் நிற்காமல் எப்போதும் போல தள்ளி போய் நின்றது அந்த நகரத்து கட்ட வண்டி . கூட்டத்துடன் மிதந்து பஸ்ஸில் ஏறி, டிக்கெட் வாங்கி அலுவலகத்தில் இறங்கும் முன்பு, ஆயிரம் கேள்விகள் கேட்டு அதற்கு அரைகுறை பதில்களால் நிரம்பியது பேருந்தும், மனதும்.

அலுவலக வாயில் காத்திருந்தது அவள் அலுப்புகளுக்கு மேலும் மெருகேற்ற, அலுவலகத்தில் அன்று மகளிர் தின கொண்டாட்டம்.

அலுவலகம் மகளிரைக் கொண்டாடுகிறோம் என்று தோரணையில் காத்திருந்தது. இருவரும் தத்தமது கேபினில் அமர்ந்தனர்.

பியூன் அழகர் இவர்களுக்காகவே காத்திருந்தது போல ஓடி வந்தான்.

**"என்ன மேடம் ? இவ்வளவு மிஸ்டேக் ? உங்க வேலையா நீங்க ஒழுங்கா பாக்காம, அந்த ஃபைல என்கிட்ட குடுத்து மேனேஜர்ட குடுக்க சொல்லிட்டு,பெர்மிஷன்ல போய்ட்டீங்க.... அந்த கோபத்தை மேனேஜர் என் மேல காட்டுறாரு பாருங்க ...." என்று எரிந்து விழுந்தான்.**

நளினிக்கு ஆத்திரம் எரிமலையாய் பொங்கியது வேகமாக எழுந்து மேனேஜர் அறையை நோக்கி நடந்தாள் விஜயா குறுக்கே வந்து தடுத்தாள்.

**"அந்த ஆளுட்ட போயி என்ன பிரச்சினைனு கேக்க போறேன்... நானும் பாத்துட்டே இருக்கேன், எப்ப பாத்தாலும் குறை சொல்லிக்கிட்டே"**

நளினி வெடித்தாள்.

**"நீ எந்த காலத்தில் இருக்கடி, அட்ஜஸ்ட் பண்ணிட்டு போக வேண்டியதுதான், இப்ப நீ கோவப்பட்ட இந்த வீக் ஃபுல்லா நீ தான் கஷ்டப்படுவ பாத்துக்க"**

விஜயா தனது தோழியை சமாதானம் செய்தாள்.

**"விடுடீ.** என்று கூறி தன் நிலை உணர்ந்தாள். சீட்டில் உட்காரும்போது அழுகையும் கோபமும் பொங்கி கொண்டு வந்தது"

கொஞ்ச நேரம் அமைதி அடைந்து விட்டு மேனேஜர் ரூமுக்கு சென்றாள். இதற்குள் அவள் கொண்டு வந்த தோசை டப்பாவில் தோசை காத்திருந்து காத்திருந்து சோர்ந்து போனது.

**"என்னம்மா நீங்க , நேத்து பார்த்த ஃப்பைலல்ல அவ்ளோ கரெக்ஷன், மிஸ்டேக் ஹெட் ஆஃபீஸ்ல இருந்து மெயில்ல போட்டு தாளிக்கிறான்...... என்ன வேலை பாக்குறீங்க ?? நீங்க கரெக்டா பண்ணலன்னு பொம்பளைன்னு விட்டுறாங்க!!! எங்களை போட்டு படுத்துறாங்க... எங்க பிரச்சனையே தலைக்கு மேல இருக்கு அதையே சரி பண்ண முடியல......... இதுல நீங்க வேற ஏமா உயிர எடுக்குறீங்க ?? என்று நிறுத்தாமல் பேசினார்."**

நளினி எதையோ சொல்ல முற்பட,

**" சும்மா கதை சொல்லாதீங்க மேடம், நீங்க நான் சொன்னதை செஞ்சிருந்தா ஏன் இப்படி, போங்க போய் உங்க வேலையை முதல்ல கரெக்டா பாருங்க, ஈவினிங் பார்க்கிறேன்,"** என்று கூறிவிட்டு தனது இணையத் திரையை உயிர்ப்பித்தான்.

தனது பக்க நியாயம் கூட மறுக்கப்பட்டவளாய் மேனேஜர் அறையில் இருந்து வெளியேறினாள் நளினி. விஜயா அவளுக்காக வெளியில் காத்திருந்தாள்.

**" என்னடி ஆச்சு ? எப்பயும் நடக்கிறது தானே, சரி விடு வேலைய பார்ப்போம்"** அன்றைய பொழுதின் கடமைகள் சற்று காரமாகவே கடந்தது. காலை இடைவெளியில் பருகிய தேநீர் கூட இதமளிக்காமல் தொண்டையை ரணமாக்கியது. நடந்த அத்தனையும் மறந்து தனது வேலைகளில் மும்முரமானாள். மதிய இடைவேளைக்கு பின்பு மேனேஜர் கொடுத்த ஃபைலை சரி செய்து அவரிடம் கொடுத்தாள்.

நளினி வேலைப்பளுவில் தொலைந்து போனாள். அன்றைய வேலைகளை சீக்கிரமாக முடிக்க சொல்லி உத்தரவு பிறந்தது. நளினியம் விஜயாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர் மூன்று மணிக்கெல்லாம் அலுவலகம் களைகட்டத் தொடங்கியது.

"ஏன் மா விஜயா கொஞ்சம் *arrangements* அ *check* பண்ணலாம்ல ,உங்களுக்காக தான கொண்டாடுரோம்...... இன்னைக்காது வேலைய பாருங்க மா.. சக அலுவலக நண்பர் தன் மகளிர் தின பங்கை கூறி முடித்தார்"

விஜயா நளினியை பார்த்து புன்னகைத்தாள்.

"நளினி *chief guest* கு குடுக்க வேண்டிய பொக்கே , மாலை எல்லாம் ரெடியா செக் பண்ணுங்க..... நலினிக்கும் உத்தரவு பிறந்தது"

அலுவலக பெண்கள் அனைவரும் சுழன்று வேலை பார்த்தனர். ஆண்களும் அவ்வப்போது "உங்களுக்கு தினம்லா சிறப்பா கொண்டாடுராங்க" எங்களுக்கு தா ஒண்ணும் இல்ல எனது நக்கலடித்தபடி நகர்ந்தனர்"

மகளிர் தின சிறப்பு விருந்தினராக வந்த அந்த அதிகாரியை வரவேற்க வாயிலில் அலுவலகமே காத்திருந்தது. அவர் வந்தவுடன் மேனேஜர் வரவேற்று உபசரித்து மாலை மரியாதை செய்தார். மகளிர் தின சிறப்புரை துவங்கியது

**"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"** என்று தனது குரலில் பெருமிததொனியில் கூறி பேசத் தொடங்கி 20 நிமிடம் உரையாற்றினார். பின்பு, கிராமிய கலைஞர்களில் கலை நிகழ்ச்சிக்காக மேடையில் இருந்து இறங்கி முன் வரிசையில் வந்து அமர்ந்தார். அடுத்த வரிசையில் விஜயாவும்,நளினியும் அமர்ந்திருந்தனர்.

அவரது அலைபேசி சிணுங்கியது. மறுபக்கம் யாரோ ?? எப்போதும் போல ஆர்வத்துடன் இருவரும் அவரையே பார்த்தபடி அமர்ந்திருந்தனர்.

**"இப்ப எதுக்கு போன் பண்ற?? சொல்லிட்டு தான வந்தேன்......... உயிரை வாங்காதே, போனை வை"**

என்று எதிர்முனை பதிலுக்கு கூட காத்திராமல் அழைப்பை துண்டித்தார். நளினிக்கும் விஜயாவுக்கும் அடுத்த முனையில் யாராக இருக்கும் என்பது புரிந்தது.

விழா 5.30 க்கு முடிந்தது. அனைவரும் மகளிர் தின சிற்றுண்டி உண்டு விட்டு வீடுகளுக்கு கிளம்ப ஆயத்தமாயினர். மேனேஜரும் தான் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்கு தனது காரில் விரைந்தார். விஜயாவும், நளினியும் தங்களின் பேருந்தின் வருகைக்காக காத்திருந்தனர். பேருந்தில் ஏறியதும் கூட்ட நெரிசல். இதில் மெட்ரோ சிட்டியின் ட்ராபிக்கும் சேர்ந்தது.

பேருந்தும் ஊர்ந்தது போல் சென்று நின்றுவிட்டது. அப்போது இருவருக்கும் பரிச்சயமான குரல் ஒலித்துக் கொண்டிருக்க இருவரும் ஜன்னல் வழியே வெளியே கண்களால் துளாவினர்.

மேனேஜர்தான்

**"பெண்கள் இல்லை எனில் நமது நாடு பசுமை இழந்து விடும். மென்மையின் துணிவும் கொண்டவர்களுக்கு மரியாதை செய்யும் நாளிது."**

பேச்சில் அனல் பறந்தது. இருவரும் ஊமையாக சிரித்துக் கொண்டனர். பேருந்தும் ஊர்ந்து ஊர்ந்து பஸ் ஸ்டாப்பை அடைந்தது. நளினியும் விஜயாவும் இறங்கினர்.

நளினி விஜயாவை கேட்டாள்.

**"ஏன்டீ இன்னைக்கு மகளிர் தினமா?? நம்மள கொண்டாடுறாங்க போல??"**

விஜயா சிரித்துக் கொண்டே சொன்னாள்,

**"உனக்கு தான் தெரியல, காலையிலிருந்து எல்லாரும் மகளிர் தினம் கொண்டாடுறாங்கல்ல, நமக்கு தான் கொண்டாட தெரியல"**

என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

நளினியின் கால்கள் முன்னோக்கியும் எண்ணங்கள் பின்னோக்கியும் நகர்ந்தது. காலையில் தனக்கு வாசல் வரை வந்து ஊட்டி விட்ட அம்மா,மாலையில் அப்பா வரும் போது முக மலர்ச்சியோடு காத்திருப்பாள். தானும் தனது அண்ணனும் வரும்போது தாமரையாய் மலர்ந்திருப்பாள். பாட்டியை கேளாமல் எதுவும் செய்யாத தாத்தா, அம்மாவின் கண் பார்வைக்கு அர்த்தம் புரிந்த அப்பா, இந்த காலங்கள் தன் கண்முன்னே கனவாகி போனதை உணர்ந்தாள்.

தன் கல்வியும் தன் வளர்ச்சியும் தனக்கான சிறகா ?? சிறையா என்று தெரியாத நிலையில் நின்றாள். பின்பு , சுயநினைவுக்கு வந்தவளாய் தாய் பாட்டி நிலையை தன் நிலையுடன் ஒப்பிட்டு ஒருவித பொறாமையோடு அங்கிருந்து நகர்ந்தாள் . காலம் பின்னோக்கி செல்லாது என்பதை புரிந்தவளாய்!!!!

கவிதை

## பொம்மலாட்டம்

காகிதப் படமாகி போன என் வாழ்வில்

ஆடும் பொம்மையின் குச்சிகள் குடும்பம் எனும் கூண்டுக்குள் சிக்கின!

பொம்மையின் இடுப்பை இருக்கும் கம்பிகளாக

எனது சுதந்திரம் உறவுகளினால்   இறுகின !

இருந்தும் எழுந்து ஆடுகிறேன் ஆட்டக்காரர்களின்

இசைவுகளுக்கு இணங்கி இயைந்து செல்கிறேன்!

ஒவ்வொரு நாளும் எனது பொம்மல் ஆட்டத்தின்

நூல் நிலைகள் மாறி மாறி கைமாறும்;

சில சமயம் குழந்தைகளிடம் புறமாய் அசைவிக்க,

கணவன் காகித பொம்மையென எண்ணி வலப்புறம் நகர்த்த,

உறவுகளின் சூழ்ச்சியிலும் பிடியிலும் சிக்காமல்,

ஆட்டக்காரர்கள் திரைகளில் இருந்து விடுபட்டு

தப்பிக்க விழைகிறேன் எனக்கான பாதையில் ....

பயணிக்க விருப்பம் கொண்டு என்

பொம்மலாட்ட காகிதத்தில் இருந்து விடுபட்டு

வானில் சிறகைவிரித்து பட்டமாக பட்டொளி

வீசிட முயற்சிப்பயணங்களோடு திரை மாறுகிறேன் .

சி. பகவதி ராஜகுமாரி ,

முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்

ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி

தூத்துக்குடி.

## பொறுமை

- விக்னேஷ் பகவதி

எல்லையின்றி போகும் மனிதனின் செயல்களில்,
பிறர் வீசும் விச வார்த்தைகளில்,
துரோகத்தின் துர்சமயங்களில்...........
ஏமாற்றத்தின் ஏளனச் சிரிப்பில்,
எதிரிகளின் எகத்தாள வார்த்தைகளில்
என் எண்ணங்களை மண்ணாக்கும்
தருணங்களில்.....
சொந்தமாக இருந்து கொண்டு சோதிக்கும்
நிமிடங்களில்.........
பணமில்லா நிலையில் எமைப் பள்ளத்தில்
தள்ளும் பொழுதினில்....
பந்தங்களின் அரிதாரச் சாயம் அற்றுவிடும்
வேளையில்.......
நடிப்புக்காகச் சிரிக்கும் நமட்டுச் சிரிப்பினில்....
எங்கே செல்கின்றாய் " நீ "
இளம்வயதில் நின்னை அறியாத நான்
இப்பொழுது உன்னையன்றி ஒரு நிமிடம்
வாழ்ந்தாலும் சூழ்ச்சியை தாங்காது
சுக்கு நூறாக்குவேன்..
இந்த மையையே தினமும் தீட்டுகிறேன்.....
பொறுமையைக் கவசமாக.....


சி.பகவதி ராஜகுமாரி.
முனைவர்பட்ட ஆய்வாளர்
ஏ.பா.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தூத்துக்குடி.

பழிகாரி

- விக்னேஷ் பகவதி

வைகறைப் பொழுதினில் வெட்ட வெளிச்சத்தினை உணர்ந்த யாழ் அரைகுறைத் தூக்கத்தில் புலம்பிக் கொண்டிருந்தாள். யாரோ அவள் கையைப் பிடித்து இழுத்து தேவலோகத்தில் கொண்டுபோய் விடுவது போன்ற மெய்யுணர்வினால் நெகிழ்ச்சியில் கண்திறக்க முடியாமல் தூக்கத்தையும் கலைக்க விரும்பாமல் உலறிக் கொண்டிருந்தாள். உறக்கத்திலே எழுந்து சென்றாள். தேவலோகத்திற்கு வழி தெரியாமல் அரவமன்றி நடந்து சென்றவள், ஒரு ஆடல் அழகி கையைப்பிடித்து வேகமாக அழைத்துச் சென்று இந்திரசபையில் அமர வைத்தாள்.

“இதென்ன சபை நான் இதுவரை பார்க்காத இடம்! பழகாத மனிதர்கள், உணராத உணர்ச்சிகள், மிகவும் பிரம்மிக்கத்தக்க அழகிகள்! இதில் நான் எப்படி வந்தேன்?” என்று வியந்து சபையில் சங்கமித்தவாறு இருந்தாள். இந்திர சபையில் விழா தொடங்கியது. மன்னனை மகிழ்விக்க பதிணெட்டு வாத்தியங்களும் முழங்கின. அதனை, ஆச்சர்யத்துடன் கண்டு இதன் பெயரென்ன என்று ஒருவரிடம் சென்றாள். அவரோ நாராயண.. நாராயண.. என்று சிரித்தவாறு அதன்பெயரை முற்றிலும் வினவ யாழ் வியந்து போனாள். தேவலோக கன்னிகளில் புகழ்பெற்ற வாகினியும், நர்த்தினியும் ஆடலைத் தொடங்கினர். இருவருக்கும் சரியான போட்டி அரங்கேறியது. இருவருக்கும் மத்தியஸ்தம் பண்ண முடியாமல் தவித்த நடுவர்களுக்கு நாரதர் இருரும் கையில் ஒரு பூச்செண்டினை ஏந்தி ஆடுங்கள் அதை கீழே விழாமல் எவர் இறுதிவரை ஆடுகிறாறோ அவரே சிறந்த ஆடலரசி என்று கூறினார்.

“இதென்ன பெரிய ஆட்டம் நம்ம ஊரு ஆட்டத்துக்கு மேல என்று அதிர்வின்றி கண்திறக்க முயன்றாள். முடியவில்லை.......... மறுபடியும் தொடர்ந்தாள்............ விழா நிகழ்வு தொடங்கியது. இருவரின் பூக்கொத்திலும் ராஜா தேளும், ராணித்தேளும் வைக்கப்பட்டு இருந்தது.

நர்த்தனி ராணித்தேளுடன் ஆட்டத்தை ரம்மியமாக ஆடினாள். வாயாடி வாகினி ராஜாத்தேளின் கொட்டில் சிவந்த கைகள் .அரிதாரம் பூசியதைவிட மூன்று பங்கு சிவந்து பூங்கொத்தினை பொத்தென்று கீழே போட்டாள். ஆட்டத்தில் தோற்ற இரண்டு நாளாக தொடர்ந்த ஆட்டத்தில் தோற்ற வாகினிக்கு பூலோகத்தில் போய் வாழுமாறு இந்திரன் கட்டளையிட்டு வீறுகொண்ட நடையில் நான்கு எட்டுகள் வைத்தார். பின்தொடர்ந்து கூந்தல் பூக்கள் தெறிக்க ஓடிய வாகினி மன்னரே... சிறு வேண்டுகோள் !

நடன மங்கையே கூறு நும் பதிலை கேட்போம். "இல்லை மன்னா எமக்கு பூலோக வாழ்வு வேண்டவே வேண்டாம்.அதற்கு நான் நரகம் செல்வேன் மன்னா! பொய் மாந்தர்களும், புறங்கூறும் மாத்தர்களும் நிறைந்த இவ்வுலகு எனக்கு வேண்டாம்" என்றாள் வாகினி.

பூலோகம் என்பது பொய்லோகம் அங்கு செல்வதற்கு நீ மனிதப்பிறவியாக செல்லப்போவது இல்லை அகிலத்தையும் இயக்கும் இயக்கியாவாய் என்று மறுக்க முடியாத கட்டளையை விடுத்து இந்திரன் சென்றார். நர்த்தனியும், மேனகையும் நமட்டுச் சிரிப்புடன் சென்றனர். ஆனாலும், உள்ளூர நர்த்தனிக்குள் தன் சகோதரியின் பிரிவை எண்ணி வருந்தினாள். ராசாத் தேளின் விடம் தலைக்கேறிய பாரத்தில் சற்று கண்ணயர்ந்தாள்.

யாழ் வாகினியை துயில் எழுப்பி பூலோகத்திற்கு வழிசொல்லி தனது வீட்டிற்குச் சென்றாள். இதுவரை நனவிலி மனதில் அகக்கண் கனவில் வாகினியுடன் பயணித்த யாழ் தானும் துயில் எழுந்து கல்லூரிக்கு புறப்பட்டாள். யாழிற்கு அதிகாலை அதிகாலை கனவு மனவோட்டமாக சென்றது. யார்? இந்த வாகினி இவளின் ஏன் கனவில் வந்தது? சரி ஏதோ புத்தக பிரம்மையாக இருக்கும் என்று எண்ணி தோழிகளுடன் உணவகம் சென்றாள்.

மையிருட்டுக் கூடியது. நிலவு வானின் உச்சத்தை தொட்டது யாழின் கனவு தொடர்ந்தது கனவு தொடர்ந்தது. பழையனூரி தாசிக்குலத்தில் ஆண்களின் ஆண்களின் பரிகாச ஆசைகளை தீர்க்கும் தாசியின் மகள் லெட்சுமியாகவும், சிறந்த தேவநாட்டியக்காரியாகவும் மறுசென்மமெடுத்தாள் வாகினி. யாழின் கண்கள் இறுகின கண்திறக்க முற்பட்டு தோற்று கதையில் ஆர்வமானாள் யாழ்.

தாசியின் மகளானாலும் கோவலனை கண்டு தாசிவேடம் கலைத்து பத்தினியாக நிலைத்த மாதவி போல லெட்சுமி தன் தாயின் பேச்சை மீறி பட்டனை விரும்பினாள். அவனோ இவள் என்னதான் இருந்தாலும் கணிகை தானே இவள் நமக்கு வேண்டாம் என்று அவளை விட்டு நீங்கி நெடுதுரம் சென்றான். .

லெட்சுமி மகாலட்சுமி போல் அணிகலன் அணிந்து அவனின் கால்தடம் பார்த்து அவனிடம் சென்றாள் இவளைக் கண்ட பட்டன்,

"ஆஹா இவள் நம்மல விட மாட்டாள் போல இவளை இந்தக் கள்ளிக்காட்டிலே சமாதி செய்து நகையை கழற்றி நம் நாடு செல்ல வேண்டியதான் என்று திட்டினான்"

அதன்படி, அவளும் அத்தான் உங்கள்,மடியில் சற்று நேரம் உறங்கி கொள்ளவா தூக்கம் வருகிறது என்றாள். அவனும் கண்ணசைக்க உறங்கினாள் லெட்சுமி. அருகில் பூனைபோல கையகற்றி ஆற்று மணலை மடிதலையணை போல் பரப்பி அவளின் தலையை வைத்தான். அருகில் கிடந்த கருங்கல்லை அவளின் தலையில் தொப்பென்று போட்டான்.

பார்ப்பானின் முகத்தில் குருதி கொப்பளித்தது. உயிர் போகாமல் துடிதுடித்த நிலையில், "இந்தக் கள்ளிச்செடியும், கடவுளுமே இக்கொலைக்கு சாட்சி, அம்மை அப்பனும் சாட்சி என்று சாபமிட்டு கண்மூடினாள்.

அயர்ந்து போன பூசாரி பட்டன் கிணற்றடியில் இளைப்பாறி தண்ணீரை இறைந்தான். அம்மை அப்பனின் மாற்று உருவ கருநாகம் தீண்டி இறந்து விட்டான்.

இவர்களின் கணக்கை ஏற்ற சித்திரகுப்தனின் கட்டளைக்கு இணங்க சோழ அரசனின் மகளாக பிறந்தாள் லெட்சுமி.

"தாய்ப்பால் ஒரே நாற்றமடிக்குது வெளியே போய் ஆடு, கோழியை அடித்து சாப்பிடுவோம் என்று ஓடினாளாம் முன்பிறவியில் லெட்சுமியாகிய நீலி"

சோழ வம்ச மரபினர் இது குழத்தையல்ல அசுரப்பிறவி என்று அஞ்சி காட்டில் விட்டனர். கள்ளி தளைத்த காட்டில் பட்டனின் மறுபிறவியை அறிந்து அவனின் வரவிற்காக காத்திருந்தாள். கொலைக்கு சாட்சியான கள்ளியை ஒடித்து ஆண்பிள்ளையாக ஒக்கலில் அமர்த்தினாள். ஊராரை அழைத்து "ஐயா இந்த செட்டிதான் என் கணவன் இது அவனது குழந்தை" என்று இறக்கி விட்டாள். அதுவும் அப்பா என்றி ஓடியது, என்னை இப்பொழுது சிறுசண்டைக்காக விலகிச் செல்ல பார்க்கிறான் என்று கூறினாள்.

மறுபிறவி எடுத்த செட்டி "இவள் யார் என்றே எனக்கு தெரியாது ஐயா! இவள் என்னை கொல்ல பார்க்கிறாள் காப்பாற்றுங்கள்" என்றான். ஊரார் அவர்களை சந்தேகித்து செட்டியின் பாதுகாப்பை மனதில் கொண்டு கல்மண்டபத்தில் தங்க வைத்தனர்.

நீலி கள்ளிப்பிள்ளையை ஓராட்டும் ஓசையில் ஊரே உறங்கியது. உறங்கும் செட்டியின் நடுநெஞ்சை கள்ளிச் செடியைக் கொண்டு பிளந்தாள். பின்னர் ஊராரிடம் செட்டியின் தாய் போல் வேடமிட்டு சென்றாள்

"ஐயா என் மகன் வணிகச்செட்டி உங்களை நம்பி தானே வந்தான். இப்படி அவன் உயிரை எடுத்த்தியளே என்று கதறினாள்".

வணிகச் செட்டியிடம் கொடுத்த் சத்தியத்தை காப்பாற்ற நாற்பது ஊரார் அனைவரும் அக்னிகுண்டத்தில் இறங்கி உயிரை மாய்த்தனர். பின்னர்

நாற்பது ஊர் பெண்களையும், குழந்தைகளையும் கொல்வதற்கு கள்ளிச்செடியில் மோரையும், பாலையும் தயார் செய்தாள்.

" பாலோ பால்.......... மோரோ மோர்....... இந்த பாலை உங்க குழந்தை குடிச்சுதுன்னா வேற எந்த பாலையும் குடிக்காது என்று பாலையும், மோரையும் கொடுத்து நாற்பது ஊரையும் பழி தீர்த்த கையுடன் ஈசனிடம் வரம் கேட்கச் சென்றாள் . ஈசனும் அவருக்கு அருள்பாலித்தார்.

"நினைத்த இடமெல்லாம் நீலி தேவதையாக கண்கண்ட இடமெல்லாம் காட்சி தந்திடுவாய்!" என்று வரமளித்தார். யாரோ முகத்தில் தலையணையை எறிவது போன்ற உந்துதலில் முழித்தாள் யாழ். "ஐயோ மணி 9.30 ஆகிடுச்சா என்று அம்மாவின் அர்ச்சனையில் வேகமாக கல்லூரிக்கு கிளம்பினாள். செல்லும் வழியில் இசக்கி தேவி நிலையத்தை கண்டு ஒரு கும்பிடு போட்டாள் அங்குள்ள பெண் யாழை அழைத்து நீ என்னை தேடி இப்போதுதான் வந்தாய். ஆனால், நான் உன்னிடம் தினமும் வருகிறேன் என்று கூறினாள். கனவுக் கதையை நம்மிடம் கூறியது அம்பாளா! என்று திரும்பியதும் அப்பெண் மறைந்தாள். அதிலிருந்து யாழ் இயக்கியம்மனின் குழந்தையாக எண்ணி அவளை வலம் வருகிறாள்.

சி. பகவதி ராஜகுமாரி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி.

## நானும் எனதும்

- வெ.மாரிச்செல்வி,

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

தோல்விகளின் துயரம்  துயரங்களின் வேள்வி!!!

வேள்வியின் நெருப்பு சூழும் புகை என் எண்ணம்!!!

எண்ணம் சிறக்க என் வண்ணம் மின்னும்!!!

கனவுகளின் காலக்கெடு,

முட்களின் மீது தவமாகும்,

வலிகளால் வாசல் வைத்து

அடிக்கொன்றாய் அசைத்து விடலாம் தளைகளை

என் கண்ணீரில் சுகம் காணும்

மேதைகளே, நானோ! பேதை...

பேதையின் எண்ணத்திற்கு

அந்தமில்லை உணருங்கள்....

பிய்த்து எறியும்

பேய்ச்சமூகம் முன்

மண்டியிட மனம் இல்லை...

உணர்ச்சி நிலைகளை எனக்குள் புதைத்து

அவமானத்தின் சமாதியை என்னில் அமைத்தேன்

கண் சிவந்த வேளைகளில் காற்றின் தோழியானேன்...

வெறுமை வட்டமிட்ட மனமெல்லாம் கள்ளியின் சுள்ளிகள்...

மனக்கரையின் சுவடுகளில் சுமையாகும் நிழல்கள்...

ஒளி வட்டம் வேண்டாம் நிழல் திட்டம் வேண்டாம்.

எண்ண வெளியில் இளைப்பாறும் அகதியை அனுமதிக்காதே மனமே

கனவுகள் பல கல்லறை கண்டுவிட்டன!!!!

# தெவிட்டா தமிழ்

- லா. உமா ரோஸ்லின்

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

ஆதியின் நாதம் கண்டறியப்படா அன்னைத் தமிழே,
பிறக்கும்போதே அன்னையாய் பிறந்தாய்....
அண்டை மொழிகளையெல்லாம் ஈன்றெடுத்தாய்,
தாய்மை தாகம் தீரவில்லையோ?
தாயில்லா குழந்தைக்கெல்லாம் தமிழ் என்ற
ஒற்றைக்கிளவியில் தாய்மடி சுகம் !!!!

வாழையடி வாழையாய் உன் குலம் தழைக்க,
உன்னை உருக்கி தொல்காப்பியமாய் பிறப்பெடுத்தாய்......
அழகு கொண்டு ஆனந்த களிப்படைய,
காப்பியம் ஐந்தும் உண் அணிகலனாய்,
அவா, வெகுளி, அழுக்காறு அவிழ்த்து வாழ
அற இலக்கியமாய் திரு விளக்கம் தந்தாய் !!!

ஆன்மீக ஆடை தரித்து பல சமய கருத்துகளை,
பக்தி இலக்கியமாய் கருவினின்று நீக்கினாய்
ஆண்டாண்டாய் அடுக்கினாலும் அளவிட முடியா
ஆழியாய் உன் அர்பணிப்பு!!!
இயன்றதெல்லாம் ஈன்று தந்தாய்,
இழிவு சேர்க்க இறந்து நின்றோம் மாற்றாளிடம் ???

பள்ளிக்கூட வாயிலிலே பல மொழிகள் பாய் விரிக்க,
பாட்டன் படும் பரிதவிப்பு பார்க்க மனம் பொறுக்குதில்லையே ?
தவறிழைக்கும் எங்களைத் தண்டிக்க வழி ஆயிரம் இருந்தும்,
தவிப்புக்களோடு தாங்கிப் பிடிக்கின்றாய் !!!

புரியவில்லை புண்ணியத் தாயே , நவீனத்தால் நசுக்கப்பட்டாலும் ,
புதியவளாய், கலைச்சொல்லாய், புத்தாக்கமாய், வீறு கொண்டு
பிறந்து கொண்டே இருக்கின்றாய் !!!
வரம் ஒன்றை வேண்டுகிறேன் ,
ஆயுள் ஓர் ஆயிரம் ஆண்டு கொடு,
அணு அணுவாய் உன்னை ஆழ்ந்து நோக்க !!!

கவிதைத் தலைப்பு: திவ்ய அமிர்தம்

எத்திசையிலும் நிலையாய்

அசையிடும் தாய்த்தமிழே

இசையின் பெருமையாய்

இன்னமுதாய் விளங்கும்

நிகரற்ற நிஜமே....

உன்னைச் சுவைக்க

ஜகத்தில் ஓர் அவை போதுமோ....

நீ மொழி அல்ல உயிர்களை

உருவாக்கி ஒளிர்ந்து

நோக்கும் கரு விழி....

புண்கள் பல மறைந்து

எண்ணும் எழுத்துமாய்

நிறைந்து வான்புகழ்

அடைந்த உன் நூலாழியின்

நடுவில் நற்றலை வேண்டி

கலையோடு எத்தனையோ

சுவாசங்கள் தொடர்ந்து பயணிக்கின்றன..... காரணம்

நீ எங்களை

கரைசேர்த்திடுவாய் என்ற

ஒற்றை நம்பிக்கையில்!!!!

பெயர்: மு.கீர்த்தனா

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி

தூத்துக்குடி